# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 10.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1417/விசாரணை/E/2019**

திரு.L.தட்சிணாமூர்த்தி .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம்,
விழுப்புரம், விழுப்புரம் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (Lockdown) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (10.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு.L.தட்சிணாமூர்த்தி மற்றும் திரு.M.நடராஜன், பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர், இணை இயக்குநர் நலப் பணிகள் அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 05.12.2018 தேதியிட்டு விழுப்புரம், இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டம், வளவனூர் பேரூராட்சி எல்லைக்குள் எத்தனை மருந்து கடைகள் உள்ளன, ஒவ்வொரு மருந்து கடைக்கும் அரசு விதி முறைப்படி இடைவெளி எத்தனை மீட்டர் இருக்க வேண்டும் என்ற அரசாணையின் நகல், அரசு பதிவு பெற்ற மருத்துவர், அரசு மருத்துவமனையில் பணிபுரிபவர்கள் தனியார் மருந்து கடையுடன் கூடிய இடத்தில் மருத்துவம் பார்க்கலாமா, அப்படி மருத்துவம் பார்க்கும் மருத்துவர் மீதும், மருத்துக் கடை உரிமையாளர் மீதும் நடவடிக்கை எடுக்க அதிகாரம் யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது, ஸ்ரீலட்சுமி மருந்து கடை மற்றும் வெங்கிடேஸ்வரா மருந்து

கடை ஆகியவை அரசு விதிமுறைப்படி நீளம், அகலம் உள்ளதா, விதி மீறல் உள்ளது என்றால் அந்த மருந்து கடைக்கு விற்பனை உரிமம் வழங்கப்பட்டது, சரிதானா, விற்பனை உரிமம் வழங்கிய அதிகாரியின் பெயர் எந்த ஆண்டு வழங்கப்பட்டது உள்ளிட்ட 7 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். தகவல் கிடைக்கப் பெறாததால் மேல்முறையீட்டாளர் 07.01.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை திருச்சி, மருந்துகள் கட்டுப்பாடு அலுவலக உதவி இயக்குநர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கும் மற்றும் 08.02.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசியில் வாயிலாக ஆஜராகி, தான் 07.01.2029 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில், 7 இனங்களில் தகவல்களை கோரியதற்கு, இதுநாள் வரை தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், ஆகவே தான் கோரிய தகவலை வழங்கிட பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுமாறும் ஆணையத்தை கோரினார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

4. இது குறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவல்கள் திருச்சி, மருந்துகள் கட்டுப்பாடு உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் விழுப்புரம், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம் சம்பந்தப்பட்ட தகவல்கள் என்றும் தெரிவித்தார். மேலும், ஆணையம் காலஅவகாசம் அளிக்கும்பட்சத்தில் விழுப்புரம், துணை இயக்குர் சுகாதாரப் பணிகள் அலுவலகம் சம்பந்தப்பட்ட தகவல்களை பெற்று வழங்குவதாக பொதுத் தகவல் அலுவலர் ஏற்பளிப்பு செய்தார். மேல்முறையீட்டாளரின் 05.12.2018 தேதியிட்ட மனுவை பரிசீலனை செய்தததில், அவர் தான் கோரும் தகவல்களை சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்பிடம் கோராதது தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் தங்கள் பொது அதிகார அமைப்பு சம்பந்தப்படாதபட்சதில், அவர் கோரும் தகவல்கள் சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றுதலில் பொதுத் தகவல் அலுவலர் அனுப்பி வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திட பொதுத் தகவல் அலுவலர் தவறியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை இவ்வாணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றது:-

> *இன்றைய விசாரணையின்போது ஏற்பளிப்பு செய்தவாறு இவ்வாணை கிடைக்கப் பெற்ற 21 தினங்களுக்குள், மேல்முறையீட்டாளர் 07.01.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தங்கள் அலுவலக சம்பந்தப்பட்ட தகவல்களையும், இதர தகவல்களை சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்புகளான திருச்சி, உதவி இயக்குநர், மருந்துகள் கட்டுப்பாடு அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் விழுப்புரம் இணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் ஆகியோரிடமிருந்து பெற்றும் மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப் பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு*

*உத்தரவிட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.*

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1417/விசாரணை/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம்,
விழுப்புரம்,
விழுப்புரம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/உதவி இயக்குநர்
மருந்துகள் கட்டுப்பாட்டு அலுவலகம்,
சி-2, 2வது கிராஸ் வெஸ்ட் தில்லை நகர்,
திருச்சிராப்பள்ளி-18.
*(மேல்முறையீட்டாளரின் 07.01.2019 தேதியிட்ட மனுவின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)*

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகம்,
விழுப்புரம்,
விழுப்புரம் மாவட்டம்.
*(மேல்முறையீட்டாளரின் 07.01.2019 தேதியிட்ட மனுவின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)*

திரு.ட.தட்சிணாமூர்த்தி.
V.புதுப்பாளையம்,
அற்பிசம்பாளையம் (அஞ்சல்),
விழுப்புரம் மாவட்டம்-605 108.

Copy to: File

RJ/PS 12.11.2020